NO FAME

NO NAME

NO SELF INTEREST

ONLY GOD

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அருளாசியுடன்

# மதுரமுரளி

## தெய்வீக மாதப் பத்திரிகை



ஹரே ராம... மஹாமந்திர நாமகீர்த்தனம்
இடம்: ஸ்ரீ வேணுகோபாலஸ்வாமி கோயில்,
சிலகபாடு கிராமம், ஓங்கோல் அருகில்,
ஆந்திரபிரதேசம்
தேதி : 31.01.2007

"ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே"



| வேணு : 12 | மார்ச் – 2007 | கானம் : 8 |
| --- | --- | --- |


www.madhuramurali.org



ஸ்ரீ ஹரி :
சைதன்ய மஹாபிரபு
நாமபிக்ஷா கேந்திரா
நாமத்வார்-துவக்கம்
இடம் :ஓங்கோல்,
ஆந்திரபிரதேசம்
தேதி : 31.01.2007

ஸ்ரீ சாந்தீபனி குருகுல
சேவா ட்ரஸ்ட் - A.P.
டிரஸ்டி திரு ரவிச்சந்திரன்
அவர்களின் வரவேற்புரை





ஸ்ரீ சாந்தீபனி குருகுல
சேவா ட்ரஸ்ட் - A.P.
டிரஸ்டி திருமதி ஸ்ரீலதா ரவிச்சந்திரன்
அவர்களின் கேந்திரா செயல்பாடுகள்
பற்றிய உரை

"ஹரே ராம.... நாம சங்கீர்த்தனம்"





உயர்நிலைப் பள்ளியில்
ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை
இடம்: சோளிங்கர்
தேதி : 02.02.2007



ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை
இடம்: ஸ்ரீ சுப்பிரமணியஸ்வாமி
திருக்கோயில், சோளிங்கர்
தேதி : 02.02.2007



ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை
இடம்: ஸ்ரீ கஜேந்திர வரதராஜப்பெருமாள்
திருக்கோயில், திருப்பத்தூர்
தேதி : 11.02.2007



"ஹரே ராம.... நகர சங்கீர்த்தனம்"
இடம்: ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசபெருமாள்
திருக்கோயில், பேர்ணாம்பட்டு
தேதி : 08.02.2007






ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை
இடம்: ஸ்ரீ வீரஆஞ்சநேயர் திருக்கோயில்,
வாலாஜாபேட்டை.

# மதுரமுரளி

Rs.10/-

Registered as Newspaper in India R. No. 62828 / 95
Date of Publication: 5th and 6th of Everymonth

| Regd. No. TN / CC (S) DN / 119 / 06-08 | Licensed to Post without prepayment WPP NO.TN / CC (S) DN / 51 / 06-08 |
|---|---|

| வேணு : 12 | மார்ச் – 2007 | கானம் :8 |
|---|---|---|




ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை
இடம்: ஸ்ரீ ஞானமலை திருக்கோயில், ஆம்பூர் அருகில்



ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை
இடம்: ஸ்ரீ காமாட்சி அம்மன் திருக்கோயில், போர்னாம்பட்டு.


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar. Website : www.madhuramurali.org;
e-mail : contact@madhuramurali.org ; publications@madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அருளாசியுடன்

# மதுரமுரளி

## தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு : 12 மார்ச் 2007 கானம் : 8

## பொருளடக்கம்

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | ... | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 134 | ... | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | ... | 10 |
| 4. | யூத மதமும் யூதர்களும்- ஒரு சிறிய அறிமுகம் (தொடர்ச்சி) | ... | 12 |
| 5. | ஸ்ரீ சங்கரர் நூல்களில் ரஸானுபவங்கள் - 20 | ... | 14 |
| 6. | பாலகர்களுக்கு ஒரு கதை - 107 | ... | 16 |
| 7. | மாலே மணிவண்ணா - 50 | ... | 19 |
| 8. | பிருந்தாவனமும் நந்தகுமாரனும் | ... | 21 |
| 9. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 132 | ... | 24 |
| 10. | செய்திகள் | ... | 27 |
| 11. | நாமஸங்கீர்த்தன ஸத்சங்கச் செய்திகள் | ... | 30 |

ஸ்ரீமத் பாகவதத்தில், நாரத மஹரிஷிக்கே சாதுக்களுடைய உச்சிஷ்டான்னத்தை சாப்பிட்டுத்தான் திவ்யஞானம் ஏற்பட்டது என்பதைப் பார்க்கின்றோம். ஸ்ரீமத் பாகவதத்தையும் பாகவத தர்மத்தையும் உயிர் மூச்சாகக் கொண்டு இருந்த பகவந்நாம போதேந்திர ஸ்வாமிகளும் தனது மஹிமையை ப்ரகடனப்படுத்த எண்ணம் இல்லாமல் இருந்தபோதிலும், ஸ்ரீமத் பாகவத வைபவத்தை ப்ரகடனம் செய்ய பெரம்பூரில் தன்னுடைய உச்சிஷ்டான்னத்தை சாப்பிட்ட ஊமை பாலகனுக்கும் திவ்ய ஞானத்தை அனுக்ரஹம் செய்தார்கள்.

ஸ்ரீ ஹரி :

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம்: திலங் தாளம்: ஆதி

**பல்லவி**

*எளிமையான வாழ்க்கை வேண்டும் – கண்ணா*
*இனிமையான பேச்சு வேண்டும் (எளிமை)*

**அனுபல்லவி**

*கனிவான மனம் வேண்டும்*
*அதில் துணிவுடன் பணிவும் வேண்டும் (எளிமை)*

**சரணங்கள்**

*ஒழுக்கமான பழக்கம் வேண்டும்*
*அழுக்கற்ற மனம் வேண்டும்*
*தூய்மையான அன்பு வேண்டும்*
*வாய்மையிலே நிலைபெற்றிருக்க வேண்டும் (எளிமை)*

*கலக்கமில்லாச் சித்தம் வேண்டும்*
*அளவில்லா ஆனந்தம் வேண்டும்*
*ஒன்றேயான தெய்வம் வேண்டும்*
*அதனினும் பெரிதான குரு வேண்டும் (எளிமை)*

*அரிதான குரு உபதேசம் வேண்டும்*
*அதனை மனதில் நிறுத்த வேண்டும்*
*அதன்படி ஒழுகுதல் வேண்டும்*
*உண்மைப் பொருளை உணர்தல் வேண்டும் (எளிமை)*

**துரித காலம்**

*உனையன்றி மற்றொருவரிடம் கேட்கத்தகுமோ*
*இதைத் தருவதில் உனக்கென்ன சிரமமோ (எளிமை)*

134

எந்தவிதமான செலவும் இல்லாமல் சுலபமாகச் செய்யக்கூடிய பக்தி சாதனம் என்பது, கதை கேட்பது மட்டும்தான். ஒரு ஹோமம், வேள்வி என்றால் அதற்காகப் பொருட்செலவு உண்டு. நம்மால் தனியாகச் செய்யமுடியாது; பலர் சேர்ந்துதான் செய்யமுடியும், அதைச் செய்வதற்குத் தகுதியான ஓர் இடமும் தேவை. அதை எப்படிச் செய்யவேண்டும் என்ற விதிமுறைகளும் தெரிந்திருக்க வேண்டும். ஆனால், எந்தவிதமான செலவும் இல்லாமல், உடலை வருத்திக்கொள்ளாமல், சுலபமாகச் செய்யக்கூடிய ஒரு பக்தி வழி என்பது கதைகேட்பது; நாமகீர்த்தனம் செய்வது ஆகும். கதை கேட்பதற்கு, சொல்வதற்கு ஒருவர் இருந்தால் போதும்; கேட்பதற்கு எத்தனை பேர் வேண்டுமானாலும் இருக்கலாம். கீர்த்தனம் செய்வதற்குக் கேட்பவர்கள் வேண்டும் என்ற அவசியம் கூட இல்லை. தனி மனிதனாக அமர்ந்துகொண்டே அவன் எப்பொழுது வேண்டுமானாலும் பகவானின் பெயரைச் சொல்லிக்கொண்டே இருக்கலாம்.

ஆழ்வார்கள், நாயன்மார்கள், ஸமர்த்த ராம்தாஸ் முதற் கொண்டு சமீபத்தில் வாழ்ந்த பகவான் யோகிராம்சுரத்குமார் அவர்கள் வரை பலர், ஒரே மந்திரத்தை, ஒரு முகமான சித்தத்துடன் இரவு பகலாகச் சொன்னதின் பலனாக உயர்ந்த பிரஹ்மஞானத்தை அடைந்திருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கின்றோம். பகவன்நாம போதேந்த்ர ஸ்வாமிகள் நாம சித்தாந்தமே செய்துள்ளார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், 'உபன்யாசங்கள், அறிவைத் தொடும் அளவிற்கு இதயத்தையும் தொடவேண்டும்' என்று கூறுவார்கள். 'இது ஒரு நல்ல பேச்சு, இது மிகவும் அற்புதமாக இருக்கின்றது. பல அரிய விஷயங்கள் உள்ளன என்று அறிவால் ஒரு சொற்பொழிவைப்பற்றிக் கொண்டாடுவதைவிட, அது எனது மனதைத் தொட்டது. அதன்படி நான் நடக்கவேண்டும் என்று

ஆசைப்படுகின்றேன் என்று ஒரு மனிதனிடம் சிறிதாவது மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும்' என்பதைத்தான் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் விரும்புவார்கள்.

கலிகாலத்தில் நாமகீர்த்தனம்தான் எல்லோருக்கும் சுலபமான வழி என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதை, 'துப்புரவு செய்யும் நம் நண்பர், சுமை தூக்கும் நம் நண்பர், கடலில் முத்துக்குளிக்கும் நம் நண்பர், மீன் பிடிக்கும் நம் நண்பர், வீதிகளில் பாரத்தை இழுக்கும் நம் நண்பர் முதற்கொண்டு, ஒரு பெரிய கம்பெனியில் Directorஆக இருக்கும் நம் நண்பர் வரை, எல்லோரும் சுலபமாகச் செய்யக் கூடியது இறைவனின் நாமகீர்த்தனம் என்பது தான்! அதற்காக யாரும், எந்தவித மாற்றங்களையும் அவர்களுடைய வாழ்க்கையிலோ, ஆடை அணிகலன்களிலோ கொண்டுவரத் தேவையில்லை. அவரவராக விருப்பப்பட்டு, துளஸீமாலை அணிந்து கொண்டு, நெற்றியில் திலகம் இட்டுக்கொண்டால் கொள்ளட்டும். இல்லையென்றால், அதைக் கூட நிர்ப்பந்திக்க வேண்டாம். அவர்கள் வாயிலிருந்து நாமா ஒன்று வந்தால் போதும். ஒரு முறையாவது வந்தால்கூடப் போதும்' என்றுதான் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் செயல்பட்டு வருகின்றார்கள்.

பல இடங்களுக்கு, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் உபன்யாசத்திற்குச் செல்லும்பொழுது, கதை முடிந்தவுடன், இருக்கக்கூடிய மூவாயிரம், நான்காயிரம் மக்கள், அவரவர்களுக்கு மனதில் இருக்கக்கூடிய எவ்வளவோ விஷயங்களை ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் நேரே தெரிவிக்க ஆசைப்படுவார்கள். அப்படி அவர்கள் சொல்வதால் அவர்களது எண்ணங்கள் நிறைவேறுகின்றனவா நிறைவேறவில்லையா என்பது ஒரு புறம் இருக்கட்டும்; அவ்வாறு சொல்வதால், அவர்களது மனதில் ஒரு சாந்தி ஏற்படுகின்றதல்லவா! அதற்காகவே, ஸ்ரீ ஸ்வாமிஜி அவற்றை எல்லாவற்றையும் பொறுமையுடன் கேட்டுக்கொள்வார்கள்.

ஆனால், அனைவராலும், அவ்வளவு பெரிய கூட்டத்தில், ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் சென்று நேரடியாகத் தெரிவிக்க இயலாது. அதனால், பெரும்பாலோருக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் நேரடியாகப் பேசித் தங்கள் மனதில் உள்ளதைச் சொல்ல முடியவில்லையே! என்ற தவிப்பு இருக்கும். இதைப்போக்க என்ன செய்யலாம் என்று

ஸ்ரீ ஸ்வாமிஜி சிந்தித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது, எதையெடுத்தாலும் நான் முதலாவதாகச் செய்கின்றேன் என்று ஆசைப்படும், இந்த வயதிலும் இளைஞர் போன்று துடிதுடிப்போடு செயல்படும் தூத்துக்குடி திரு. கதிரேசன் அவர்களிடம், 'முதன்முறையாக ஒரு மஹாமந்திர நாமகீர்த்தனக் கூட்டுப் பிரார்த்தனைக்கு ஏற்பாடு செய்தால் என்ன?' என்று ஸ்ரீ ஸ்வாமிஜி கேட்க, அதன்படியே செயல்படுத்திவிடலாம் என்று மறுநாளே தீர்மானித்து, தூத்துக்குடியில் ஒருநாள் மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை, நவம்பர் 2006இல் நடத்தப்பட்டது.

அது எவ்வாறு நடைபெற்றது என்றால், சிறிதுநேரம் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், நாமத்தின் மஹிமையைப் பற்றி அருளுரை ஆற்றுவார்கள். அங்குக் கூடியிருக்கும் மக்கள் எல்லோரையும், மனதில் என்னென்ன பிரார்த்தனைகள் இருக்கின்றனவோ அவற்றை நினைத்து, மஹாமந்திர நாமகீர்த்தனம் செய்து, பிரார்த்தனை செய்யச் சொல்வார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜியும் மேடையில் அமர்ந்து நாம கீர்த்தனம் செய்து பிரார்த்தனை செய்வார்கள். பிறகு, ஸ்ரீ ஸ்வாமிஜி அருளிய பிரசாதம் எல்லோருக்கும் வழங்கப்படும். இப்படியாக மஹாமந்திரக் கூட்டுப்பிரார்த்தனை, தூத்துக்குடியில் முன்பின் எந்த ஏற்பாடுகளும் இல்லாமல் முதன்முறையாக நடைபெற்றது.

அதற்குப்பிறகு, அந்த மஹாமந்திரக் கூட்டுப்பிரார்த்தனையில் கலந்துகொண்டவர்கள் பலர், 'நாங்கள் பிரார்த்தனை செய்தது எங்களுக்கு நடந்தது: மன அமைதி கிடைத்தது' என்று மிகவும் மகிழ்ச்சியுடன் சொல்ல, 'இதையே ஏன் பெரிய அளவில் தொடர்ந்து செயல்படுத்தக் கூடாது?' என்ற ஸ்ரீ ஸ்வாமிஜியின் சிந்தனைதான் ஜனவரி 2007 முதல் தேதியன்று, சென்னை காமராஜர் அரங்கத்தில் நடத்தப்பட்ட மிகப்பெரிய மஹாமந்திர நாமகீர்த்தனக் கூட்டுப் பிரார்த்தனையாகும்.

இந்த நாமகீர்த்தனக் கூட்டுப்பிரார்த்தனையில் சென்னை மட்டுமில்லாமல், வெளியூர்களிலிருந்தும், வெளிமாநிலத்திலிருந்தும், ஏறத்தாழ ஆறாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள். அதில் என்ன அதிசயம் என்றால் எல்லாரும் சேர்ந்து

அங்கு மஹாமந்திர நாமகீர்த்தனத்தை ஒரே குரலில் செய்யும் பொழுது, எல்லாருடைய மேனியும் சிலிர்த்து, அவரவர்களுக்கு ஒரு தெய்வீக உணர்வு ஏற்பட்டது என்பதை நாமகீர்த்தன நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்களிடமிருந்து நேரடியாக நாம் அறிந்து கொண்டோம்.

சென்னை காமராஜர் அரங்கில், ஸ்ரீ ஸ்வாமிஜி, உலகிற்கு அளித்த செய்தியும், அனைவரும் ஸ்ரீ ஸ்வாமிஜியுடன் சேர்ந்து மஹாமந்திர நாமகீர்த்தனம் செய்தபொழுது ஏற்பட்ட பேரானந்த அனுபவமும், எல்லோருடைய நினைவிலும் ஒரு நீங்காச் சுவட்டை ஏற்படுத்தியதோடன்றி, அந்த நாளை மறக்கமுடியாத நாளாக ஆக்கியது என்றால் அது மிகையாகாது.

அதன்பிறகு, மஹாமந்திரக் கூட்டுப்பிரார்த்தனைகளை இந்த மாதிரியாகத் தங்கள் நகரங்களிலும் செயல்படுத்த வேண்டும் என்று அன்பர்கள் பலர் கேட்டுக்கொண்டதின் பேரில், ஸ்ரீ ஸ்வாமிஜி, அதற்குச் சம்மதம் தெரிவித்தார்கள். அதன் தொடர்ச்சியாக, சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா சார்பில் தூத்துக்குடி திரு. கதிரேசன் அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு, முதல் நிகழ்ச்சி கோவில்பட்டியில் பிப்ரவரி 18, 19 தேதிகளிலும், இரண்டாவது நிகழ்ச்சி ராஜபாளையத்தில் பிப்ரவரி 20, 21 தேதிகளிலும், மூன்றாவது நிகழ்ச்சி, விருதுநகரில் பிப்ரவரி 22, 23 தேதிகளிலும், நான்காவது நிகழ்ச்சித் திருநெல்வேலியில் பிப்ரவரி 24, 25 தேதிகளிலும் ஏற்பாடு செய்தார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் பிப்ரவரி 16-ஆம் தேதி மஹா சிவராத்திரி அன்று, கல்பாக்கம் அருகிலுள்ள விட்டலாபுரம் அருள்மிகு பிரேமிக விட்டலர் ஆலயத்திற்குச் சென்று அபிஷேக ஆராதனைகள் செய்தார்கள்; அங்கு நடைபெற்ற அபங்க திவ்யநாம கீர்த்தனத்தில் கலந்து கொண்டார்கள். பிறகு மதுரபுரியில், காஞ்சி மஹாபெரியவர்கள் ஸ்ரீ சந்திரசேகரேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகளின் திருப்பாதுகைகளுக்கு ருத்ர பாராயணம் சொல்லி அபிஷேக, ஆராதனைகளை நிகழ்த்தினார்கள். பிறகு, மஹாமந்திர நாமகீர்த்தன நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள கோவில்பட்டிக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

கோவில்பட்டி நிகழ்ச்சியில், கோவில்பட்டியைச் சேர்ந்த அன்பர்கள் திரு. திருமலை, திரு. செல்வராஜ், திரு. தனராஜ்ராஜா,

திரு. திருப்பதிராஜா, திரு. இளங்கோ மற்றும் அன்பர்கள், தாங்களே நிகழ்ச்சி நடத்துவதற்கான பொறுப்பை எடுத்துக்கொள்வதற்கு, முன்வந்து ஆர்வமாக, அந்த நகரத்தில் இருக்கக் கூடியவற்றில் நவீனமான, கலைநயமிக்க, அழகான 'ஆர்த்தி ஹால்' என்ற கல்யாண மண்டபத்தில், மிகப்பெரிய அளவில் ஏற்பாடுகள் செய்து நடத்தினர்.

கோவில்பட்டியே விழாக்கோலம் பூண்டிருந்தது. இரண்டு நாட்களிலும் மக்கள் கூட்டம் கல்யாண மண்டபத்தின் உள்ளே, வெளியே என்று முழுவதும் நிரம்பி வழிந்தது. பெரும் திரளான மக்கள் மஹாமந்திரம் சொல்லிச் சென்றார்கள். திரு. திருமலை அதற்கு வேண்டிய எல்லாவிதமான ஏற்பாடுகளையும் மிகவும் கவனித்துச் செய்திருந்தார். 'அந்த இரண்டு நாட்கள் நிகழ்ச்சி முடிந்த பிறகும் கூட, நீங்கள் சொல்லிவிட்டுச் சென்ற அந்த மஹாமந்திர நாமகீர்த்தனம் மக்கள் காதுகளில் ரீங்காரம் செய்துகொண்டிருப் பதாக அவர்கள் சொல்கிறார்கள்' என்று ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் மிகவும் மகிழ்ச்சியுடன் கூறினார். அந்த 'ஆர்த்தி ஹாலை' எந்தவிதமான வாடகையும் வாங்கிக்கொள்ளாமல் அதனுடைய உரிமையாளர் திரு. கோவிந்தராஜன் அவர்கள், தானாகவே முன்வந்து, இந்த மஹாமந்திர நாமகீர்த்தன நிகழ்ச்சி தன்னுடைய கல்யாண மண்டபத்தில் நடப்பது தன் பாக்கியம், என்று நடத்திக் கொடுத்தார்கள்.

அடுத்ததாக ராஜபாளையத்தில் மஹாமந்திரக் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றது. ராஜபாளையத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற N.R. கிருஷ்ணமராஜா நினைவுக் குழுவைச் சேர்ந்த திரு. T.R. ராமசுப்பிரமணியராஜா, திரு. N.R.K. ஸ்ரீகண்டராஜா (கஜபதி), திரு. V.S. கணேசராஜா, திரு. T.P. முருகராஜா மற்றும் நமது சத்சங்கத்தைச் சேர்ந்த திரு. சற்குணம் போன்ற அன்பர்கள் விழாப் பொறுப்பை முழுவதும் ஏற்றுக்கொண்டு செவ்வனே நடத்திக் கொடுத்தார்கள். ராஜபாளையத்தில் 2000 முதல் 2500 வரை மக்கள் இரண்டு நாட்களிலும் உத்ஸாஹமாகத் தினமும் கதைகேட்டு மஹாமந்திர நாமகீர்த்தனத்தில் கலந்துகொண்டார்கள்.

ராஜபாளைய நிகழ்ச்சிகளின்பொழுது ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் ஸ்ரீ வில்லிபுத்தூரில், தி. பெருமாளப்பன் அவர்களால் கட்டப்பட்டு அவரது குமாரர் தி. மஹாலிங்கம் அவர்களால் நடத்தப்பட்டு வரும்

பகவான் யோகிராம்சுரத்குமார் அவர்களின் ஆலயத்திற்குச் சென்று அங்குக் கூடியிருந்தவர்களுக்கு நாமத்தின் வைபவத்தைச் சொல்லி நாமகீர்த்தனமும் செய்து அருளாசி வழங்கினார்கள். அதுபோல், ராஜபாளையத்தில் திரு. சற்குணம் அவர்களால் நடத்தப்பட்டு வரும் பகவான் யோகிராம்சுரத்குமார் பஜனை மண்டலிக்கும் ஸ்ரீ ஸ்வாமிஜி சென்று வந்தார்கள்.

அடுத்த நிகழ்ச்சியாக விருதுநகரில், நாமகீர்த்தனக் கூட்டுப் பிரார்த்தனை K.V. High School இல் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியைத் தூத்துக்குடி கதிரேசன் அவர்களே ஏற்பாடு செய்திருந்தார்கள். இரண்டு நாட்களிலும் பலதரப்பட்ட மக்கள், கலந்துகொண்டு பலனடைந்தனர். விருதுநகர் நிகழ்ச்சிகளின்பொழுது ஸ்ரீ ஸ்வாமிஜி, சிவகாசியில் திரு. சுரேந்திரன், திருமதி. உமாசுரேந்திரன் அவர்கள் குடும்பத்தினரால் நிர்வகிக்கப்பட்டுவரும் பகவான் யோகிராம் சுரத்குமார் பஜன் மண்டலியில், நாமகீர்த்தனம் செய்து, நாம மஹிமை பற்றி அருளுரை வழங்கினார்கள். பிறகு, திருநெல்வேலிக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், திருநெல்வேலியில் தங்கியிருந்த பொழுது, காலையில் புறப்பட்டு, ஸ்ரீ வைகுண்டம், ஆழ்வார் திருநகரி, திருக்கோளூர், தென்திருப்பேரை, இரட்டைத் திருப்பதி-முதலான திவ்யதேசங்களுக்குச் சென்று பெருமாளைத் தரிசனம் செய்துவிட்டு வந்தார்கள். ஆழ்வார்திருநகரியில் திரு. ராமானுஜம் அவர்கள் இல்லத்திற்கு ஸ்ரீ ஸ்வாமிஜி விஜயம் செய்தார்கள்.

திருநெல்வேலியில், நெல்லை சங்கீத சபாவைச் சேர்ந்த திரு. நடேசன்-சாரதா தம்பதியினர் மற்றும் அவர்களின் குமாரர் திரு. சந்தானகோபாலகிருஷ்ணன் மற்றும் நெல்லை அன்பர்களால் மஹாமந்திர நாமகீர்த்தன நிகழ்ச்சி மிகவும் விமரிசையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நெல்லையில் இரண்டாம் நாள் அன்று நடைபெற்ற நகர சங்கீர்த்தனம், 'மிகவும் ஒரு வித்தியாசமான, மறக்க முடியாத-ஓர் அனுபவமாக அமைந்தது' என்று ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் வர்ணித்தார்கள். அந்த இரண்டு நாட்களிலும் சங்கீத சபா ஹால் முழுவதும் நிரம்பி வழிந்தது. பக்தர்கள் எண்ணற்றோர் 'ஹரே ராம...' மஹாமந்திரப் பிரார்த்தனையில் கலந்துகொண்டு நன்மையடைந்தனர்.

இந்த நான்கு இடங்களிலும் நடைபெற்ற மஹாமந்திரக் கூட்டுப்பிரார்த்தனையில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு எல்லோரும் சேர்ந்து நாமகீர்த்தனம் செய்தது கேட்பதற்கு மிகவும் ஆனந்தமாக இருந்தது. தூத்துக்குடி ஸ்ரீ பார்வதியம்மன் திருக்கோயில், திரு. சண்முகக்கனி அவர்களின் இல்லம், காமராஜர் கல்லூரி, ஒட்டப்பிடாரம் ஆகிய இடங்களில் நடைபெற்ற சத்சங்கங்களிலும் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டார்கள்.

தூத்துக்குடி திரு. கதிரேசன்-விஜயலக்ஷ்மி தம்பதியினர், அவர்களது குமாரர் திரு. நேரு பிரகாஷ்-காஞ்சனா தம்பதியினர், சிவகாசியைச் சேர்ந்த திரு. சுரேந்திரன்-உமா தம்பதியினர், திரு. ஜெயராஜ்-வாசுகி தம்பதியினர், மதுரைச் சேர்ந்த திருமதி. திலகவதி ராஜசேகர் மற்றும் அவரது குமாரர் திரு. குமரவேல், நெல்லையைச் சேர்ந்த திருமதி சாரதா நடேசன் மற்றும் பக்தர்கள் எல்லோரும் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் எங்கெல்லாம் மஹாமந்திர நாமகீர்த்தன நிகழ்ச்சிகள் நடத்துகின்றார்களோ அங்கெல்லாம் ஆர்வத்துடன் ஈடுபட்டுக் குடும்பத்துடன் தாங்கள் வந்ததோடு மட்டுமில்லாமல் நாமாவை எப்பொழுதும் சொல்லிக்கொண்டு, ஸ்ரீ ஸ்வாமிஜியின் சேவையே தங்களது உயிர் மூச்சு என்று வாழ்ந்து வருவதைப் பார்க்கும்பொழுது, 'இத்தகையவர்களின் ஆர்வத்தினாலேயே மஹாமந்திரப் பிரச்சாரம் நடைபெறுகின்றது' என்று ஸ்ரீ ஸ்வாமிஜி அகமகிழ்ந்தார்கள்.

இப்படி மஹாமந்திர நாமகீர்த்தனப் பிரார்த்தனைகளில் மிகவும் உத்ஸாஹமாக, மக்கள் கூட்டம் கூட்டமாகக் கலந்துகொள்வதைப் பார்க்கும்பொழுது, 'இதுபோல் தொடர்ந்து தமிழகம் முழுவதும், இந்தியா முழுவதும், ஏன் உலகெங்கிலும்கூட நடைபெற வேண்டும் என்பதுதான் எனது அவா' என்று ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் தெரிவித்தார்கள்.

(தொடரும்)

**-டாக்டர் ஆ. பாக்யநாதன்**

*குறிப்பு : நாமகீர்த்தன வைபவங்களின் புகைப்பட தொகுப்பு அடுத்த இதழில் வெளிவரும்*

*- ஆசிரியர்.*

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : நீங்கள் கடவுளைப் பார்த்தது உண்டா?*

பதில் : கடவுள் என்னைப் பார்த்திருக்கின்றார்.

*கேள்வி : பகவானுடைய நாமத்திற்கும், பகவானுக்கும் எப்படி வித்தியாஸம் இல்லை என்று சொல்கிறீர்கள்?*

பதில் : ஒருவர், கோவிலிலுள்ள பகவானைப் பார்க்கும்பொழுதும், தொடும்பொழுதும் இது ஒரு கற்சிலை அல்லது உலோகம் என்றுதான் நினைக்கின்றார். இதைத்தவிர ஒரு உண்மையான பகவான் இருக்கின்றார் என்றும் நினைக்கின்றார். ஆனால், பகவானுடைய பெயரைச் சொல்லும்பொழுது, இவர், கோவிலில் உள்ள பகவானின் பெயரைச் சொல்கின்றாரா, அல்லது சைதன்யமான பகவானின் பெயரைச் சொல்கின்றாரா என்று சொல்ல முடியுமா? இதிலிருந்து நாமத்திற்கும், பகவானுக்கும் எந்த வித்தியாஸமும் இல்லை என்று ஓரளவு நமக்குப் புரிகின்றது அல்லவா!

*கேள்வி : இந்த உலகம் இயற்கை என்று எனக்குத் தோன்றுகிறது? சரியா?*

பதில் : கடற்கரையில் காற்று வாங்கச் செல்லும் ஒருவன், அதன் கரையிலேயே அமர்ந்து காற்று வாங்கிவிட்டுச் சிறிது நேரம் நண்பர்களுடன் பேசிவிட்டு வந்துவிடுகின்றான். அதேசமயம், இந்தக் கடலின் நீளம், அகலம், அது ஓயாமல் அலை அடித்துக் கொண்டிருப்பது, அதில் உள்ள பவழம், சங்கு, முத்து மற்றும் எவ்வளவோ பொருட்களைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை. அதுபோலவே, நாம் வீட்டில் ஒரு மோட்டார் வாகனம் வாங்கினாலேயே அது ஒரு வருடம் கூடச் சரியாக ஓடமாட்டேன் என்கின்றது. ஆனால், நம்முடைய சரீரம் வருடக்கணக்காக இயங்கி வருகின்றது. சரீரம் இயங்குவதே ஒரு ஆச்சர்யம். இதுமாதிரி எண்பத்து நான்கு லட்சம் சரீரங்களின் அமைப்பு, அதை இயக்கும் விதம், எவ்வளவு விந்தை. அதுபோலவே, மழையை எதிர்பார்க்கும்

விவசாயி, மழை வருமா, வராதா என்பதை மேகத்தை மட்டும் பார்த்துவிட்டுப் போய்விடுகின்றான். அதைத்தாண்டி நிற்கும் அண்டசராசரத்தில் உள்ள சூரியன், சந்திரன், மற்ற கோள்கள், நட்சத்திரங்கள் இவைகள் இயங்கும்விதம், இவற்றில் உள்ள ஒழுங்கு இவைகளைப் பார்க்கும்பொழுது இயற்கையில் ஒரு ஒழுங்கு இருப்பதாலேயே இயற்கையை இயற்கையாக நடத்திச் செல்லும் இறைவன் ஒருவர் இருக்கின்றார் என்று தெரிய வருகின்றது.

ஸ்ரீ ஹரி :

**ஸ்ரீ ப்ரேமிகவரதன் மருத்துவமுகாம், மஹாரண்யம், மதுரபுரி**

ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் ட்ரஸ்ட், சென்னை சார்பில் ஸ்ரீ ப்ரேமிக வரதன் இலவச மருத்துவ முகாம், மஹாரண்யம், மதுரபுரியில் பிப்ரவரி மாத எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெற்றன.

**- Trustees**

ஸ்ரீ ஹரி:

**ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் சந்நதி**

மஹாரண்யம் கிராமம், மலைப்பட்டு B.O. படப்பை. P.O. 601 301.

ஸ்ரீ பெரும்புதூர். T.K. காஞ்சி மாவட்டம்

ஸகல மங்களங்களையும் அருளும் வரப்ரஸாதியான மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் சந்நதியில் பக்தர்களின் பிரார்த்தனைகள், ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் காலையில் பெருமாளிடம் விண்ணப்பிக்கப்படுகின்றன. இந்தப் பிரார்த்தனைகளைப் பெறுவதற்காக, பெருமாள் ஸந்நதியில் ஒரு பிரார்த்தனைப் பெட்டி வைக்கப்பட்டுள்ளது.

பக்தர்கள், தங்களது பிரார்த்தனைகளை வெள்ளைக் காகிதத்தில் எழுதி, தபால் தலை ஒட்டிய உறைமீது ''பிரார்த்தனைப் பெட்டி'' என்று குறிப்பிட்டு தங்கள் முகவரியுடன் அனுப்பினால், தங்கள் பிரார்த்தனைகளைப் பெருமாளிடம் தெரிவிக்கப்பட்ட பின் பிரசாதம் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

பிரார்த்தனைப் பெட்டியில் கண்டிப்பாகக் காணிக்கைகள் எதுவும் செலுத்தக்கூடாது. பிரார்த்தனைகள் மட்டுமே பிரார்த்தனைப் பெட்டியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

-ராதே க்ருஷ்ணா-

# யூத மதமும், யூதர்களும் - ஒரு சிறிய அறிமுகம்

*- சென்ற இதழ் தொடர்ச்சி*

*மதுரமுரளியில் நம் ஸனாதன மதத்தைப் பற்றிய பல அரிய விஷயங்கள் மற்றும் வேதம், இதிஹாஸம், புராணம் இவற்றின் சாரம் முதலியவை ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருள்மொழிகள் பகுதியில் இடம் பெற்று வந்துள்ளன.*

*'உலகின் புராதனமான மற்ற மதங்கள், கலாசாரங்கள் பற்றியும் ஓர் சிறிய அறிமுகம் நம் மதுரமுரளியில் இடம் பெறவேண்டும்' என்பது ஸ்ரீ ஸ்வாமிஜியின் அவா. அதன்படி யூதமதத்தைப் பற்றிய ஒரு சிறிய அறிமுகத்தை டாக்டர் ஆ. பாக்யநாதன் கொடுத்திருக்கின்றார். -ஆசிரியர்*

### யூத மதக் கோட்பாடுகள்

யூத மதத்தின் அடிப்படையான நூல் 'டோரா' (Torah). முதலில், இது எழுத்து வடிவில் வழங்கி வரவில்லை. ஸினாய் மலையில் (Mt.Sinai) மோசஸ் (Moses) என்ற பெரியவருக்கு இறைவனால் சொல்லப்பட்ட கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே ORAL TORAH விளங்கியது. பின்னரே, இது எழுத்து வடிவில் கொண்டு வரப்பட்டது (WRITTEN TORAH). நமது வேதங்களைப் போல், டோராவும் முதலில் எழுத்துவடிவில் இல்லாமல் சொல்வடிவில், சூத்ரங்களாக இருந்ததால், இதற்குப் பல பெரியவர்களும், ராபைக்களும் (RABBIS) பல கோணங்களில் விளக்கங்களும், வியாக்யானங்களும் அளித்துள்ளனர். சில இடங்களில், ஒருவர் கொடுக்கும் விளக்கத்திற்கு மற்றொருவரின் விளக்கம் எதிர்மறையாகக் கூட இருப்பதுண்டு என்று குறிப்புகள் உள்ளன. இப்படிப் பலதரப்பட்ட கோணங்கள் இருப்பினும், பெரும்பாலானவர்களால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுவது மைமோனிடிஸின் (MAIMONIDES) பதிமூன்று கோட்பாடுகள். அவை பின்வருமாறு:

1) நான் 'இறைவன் ஒருவனே எல்லாவற்றையும் படைத்துள்ளான்; படைத்தான்; படைக்கப் போகின்றான்; வழிநடத்தியும் செல்கின்றான்' என்பதை முழுமையாக நம்புகின்றேன்! அவனது நாமம் ஓங்குக!

2) இறைவன் என்பவன் எப்பொழுதும் ஒருவனே என்பதை உறுதியாக நம்புகிறேன். அவனது நாமம் ஓங்குக!

3) இறைவன் இந்த ஸ்தூல உடம்பிற்கும், பிரபஞ்சத்திற்கும் அப்பாற்பட்டவன்; அவன் இணையற்றவன்; அவன் நாமம் ஓங்குக!

4) இறைவனே ஆதியும், அந்தமும்! அவனது நாமம் ஓங்குக!

5) இறைவன் ஒருவனே வழிபடத்தக்கவன். அவனைத்தவிர வேறு எவரும் வழிபடத்தக்கவர்கள் அல்லர். அவனது நாமம் ஓங்குக!

6) மஹான்களின் பணிகள், அவர்களின் வார்த்தைகள் எல்லாம் சத்யம் என்பதை முழுமையான நம்புகின்றேன்.

7) மோசஸ் (Moses) அவர்களின் கோட்பாடுகளை முழுமையாக நம்புகின்றேன். அவரே எல்லா யூதகுருமார்களுக்குத் தலைவர்.

8) 'நம்மிடம் இன்றுள்ள டோராவானது அன்று இறைவன் மோசஸிடம் உபதேசித்ததே' என்று நம்புகின்றேன்.

9) டோராவானது எவ்விதத்திலும் மாறுதலை அடையாது.

10) இறைவனுக்கு நமது ஒவ்வொரு எண்ணமும், செயலும் நன்றாகத் தெரியும். அவனது நாமம் ஓங்குக.

11) இறைவன் அவனது கோட்பாடுகளின்படி நடப்பவர்களுக்கு ஆசி வழங்குகிறார். மீறுபவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்.

12) இறைவன் பூமியில் தோன்றும் காலம் வெகுதொலைவில் இல்லை. அவனது நாமம் ஓங்குக!

13) அப்படி இறைவன் தோன்றும்பொழுது இறந்தவர்களை உயிர்ப்பிப்பார். அவனது நாமம் ஓங்குக.

***Sri Hari :***

***Pranams to the Lotus feet of***
**H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**

M/s. BUDDIES INFOTECH PRIVATE LIMITED

*Web Designing and Application Development*
Old No. 22, New No. 34, Sriman Srinivasa Road,
Alwarpet, Chennai - 600 018. Phone No. 044-421 44 662
e-mail : contact@buddiesinfotech.com

# ஸ்ரீ சங்கரர் நூல்களில் ரஸானுபவங்கள்-20

- குடந்தை என். ராமசர்மா

*(யஸ்யாம் நிசாயாம் ப்ரஸுப்த இவ ஸ்வப்நத்ருச :*
*ஸாநிசா அவித்யா ரூபத்வாத் பரமார்த்த தத்வம் பச்யதோமுநே:)*

தன்னையும் உலகையும் மறந்து தூங்கும் அக்ஞானியின் பேருறக்கத்தில் உண்மைத் தத்துவம்தான் தூங்காமல் அவனைத் தூங்கச் செய்துகொண்டிருக்கிறது. இத்தத்துவத்தைக் காணும் வல்லமை பெற்றிருப்பதால் ஞானிக்கு இது விழிப்பு நிலையாகவே இருக்கிறது. அதாவது, எல்லா உயிர்களும் உறங்கும் இரவு, மனமடங்கிய முனிவனுக்குப் பகலாகவே இருக்கிறது.

*...யாநிசா ஸர்வ பூதானாம் தஸ்யாம் ஜாகர்திஸம்யமீ* ।

எந்த அக்ஞான இருட்டை வெளிச்சம்போல் மயங்கி அனைத்து உயிர்களும் விழித்துக்கொண்டிருக்கின்றனவோ, அது உண்மைத் தத்துவத்தைக் காணும் முனிவனுக்கு இரவாகவே இருக்கிறது.

*அத: கர்மாணி அவித்யா அவஸ்த்தாயாமேவ சோத்யந்தே,*
*ந வித்யா அவஸ்த்தாயாம்.*

எனவே, அக்ஞான நிலையில்தான் கர்மங்கள் விதிக்கப் படுகின்றன. விதி நிஷேத ரூபமான (செய்யத்தக்கன, செய்யத் தகாதன) கர்மங்கள் ஞானியிடம் செல்லாது.

கீழ்வானில் ஆதவன் எழுந்தால் இரவின் இருட்டு தானாகவே விலகுகிறது. இரவு என்ற ஒன்று தனியாக உண்டா என்ன? இருட்டு வந்தால் இரவு. இருட்டு நீங்குவதே பகல். அதுபோல், ஹ்ருதயாகாசத்தின் மனவெளியில் ஞான சூரியன் எழவும் அக்ஞான இருட்டு நழுவிவிடுகிறது. அதாவது, பிரித்துக் காணும் பேத அறிவு மறைகிறது. ஒன்றையே காணும், ஒன்றாகக் காணும் ஸம்யக் தர்சனம் நிலைபெறுகிறது. கர்மா செய்ய இயலாது.

அப்படியென்றால் கர்மாவை விதிக்கிற வேதப் பிரமாணம் பயனற்றதா? இல்லை. பேதபுத்தியுடைய அக்ஞானியிடத்தில் அது பிரமாணமாகும்.

*ததந்தத்வாச்ச ஸர்வ ப்ரமாணாநாம் ப்ரமாணத் வஸ்ய ॥*

பிரமாணங்கள் யாவும் பிரமாணங்களாயிருப்பது ஆத்ம ஞானம் உண்டாகும் வரையில்தான். ஆச்சாரியரின் இந்த வாக்கை ‘ஆனந்தகிரி’ உடைத்து உணரச் சொல்லும் பாங்கே தனிதான்.

*ஸர்வேஷாம் ப்ரமாணாநாம் ப்ராமாண்யஸ்ய*
*ஆத்மஞாநோதயாவஸாநத்வாத், தஸ்மிந் உத்பந்நே*
*வ்யவஹாரஸ்ய நிரவகாசத்வாத் நதத்ப்ரதி நியமாய*
*ஞாநிநோ விதி: இத்யர்த்த:*

ப்ரமாணங்கள் யாவும் ப்ரமாணங்களாயிருப்பது ஆத்ம ஞானம் உண்டாகும் வரையில்தான். ஆத்மஞானம் எழுந்த பின் விவகாரங்களுக்கு (கர்மங்களுக்கு) ஏது இடம்? எனவே, சாஸ்திர விதிகள் ஞானிகளிடம் செல்லுபடியாகாது. இவர்களால் கர்மா செய்ய முடியாது.

சுகப்பிரம்மத்தைப் பார்த்து ஸந்த்யாவந்தனம் செய்தாகி விட்டதா என்று கேட்க முடியாது. ரிஷபதேவரைப் பார்த்து ஸ்நாநம், பூஜை செய்தீரா என்று கேட்க முடியாது. செய்வதினால் புண்ணியமில்லை. செய்யாததினால் தோஷமுமில்லை.

*தஸ்மாத் ந ஆத்மவித: கர்மண்யதிகார இதி ஸித்தம் ॥*

இவ்வாறு, பகவானின் வாக்கிலிருந்தே, ஆத்ம ஞானம் பெற்றவனுக்குக் கர்மங்களில் உரிமை இல்லை என்பது நிர்ணயிக்கப்படுகிறது என்கிறார் ஆச்சாரியர்.

வேதாந்தம் தலைகீழ் வாதமாக அல்லவோ இருக்கிறது. இல்லை இல்லை!! நாம் காணும் உலகம்தான் தலைகீழாக இருக்கிறது. இதை நான் சொல்லவில்லை. கீதை சொல்கிறது என்கிறார்.

*ஊர்த்வ மூலமத: சாகம் அச்வத்தம் ப்ராஹு: அவ்யயம் ॥*

‘மேலே வேரையும் கீழே கிளைகளையும் கொண்டதாக ஸம்ஸார வ்ருக்ஷம் என்றும் எங்கும் பரவி நிற்கிறது’.

விபரீத (தலைகீழ்) ரஸத்தைப் பார்ப்போமா!

**– வளரும்**

# பாலகர்களுக்கு ஒரு கதை – 107

ஒரு சமயம், ஆன்மீக சாதகர்கள், மக்கள் நெருக்கடியுள்ள ஆரவாரம் மிக்க கடைவீதி வழியாக, ஓர் இடத்தில் நடைபெறும் பிரார்த்தனை நிகழ்ச்சிக்குச் சென்றுகொண்டிருந்தனர். அந்த கடைவீதியோ மக்களின் அதிக நடமாட்டத்தால் இரைச்சலும் சப்தமும் உடையதாய் இருந்தது.

அந்தச் சமயத்தில் அவர்களில் ஒருவன், ''நாம் சேரவேண்டிய இடத்தில் நாமகீர்த்தனப் பிரார்த்தனை ஆரம்பித்துவிட்டது!'' என்கிறான். இதைக் கேட்டு ஆச்சரியமடைந்த மற்றவன், ''என்ன சொல்கிறாய்? பஜனைப் பாடல்கள் ஆரம்பித்தாகிவிட்டதா? உனக்கு எப்படித் தெரியும்? நாம் செல்லவேண்டிய தூரம் இன்னும் இருக்கிறதே!'' என்று சொன்னான்.

அதற்கு அவனோ, ''என் காதில் கேட்கிறது. பிரார்த்தனை ஆரம்பித்தாகிவிட்டது. வாருங்கள்! சீக்கிரம் விரைவாகச் செல்வோம்!'' என்றதும், ''நீ பொய் சொல்கிறாய்! நிச்சயம் நீ சொல்வது உண்மையாக ஒருபோதும் இருக்க முடியாது. ஏனெனில், பிரார்த்தனை நிகழ்ச்சி நடக்கும் இடமும் தொலைவு. அதுவும், இந்தக் கடைவீதியிலே, மக்கள் நடமாட்டத்திலே சந்தை களேபர சப்த இரைச்சலிலே பக்கத்தில் ஒருவர் கூப்பிடுவது கூடக் கேட்க முடியாதபோது, பிரார்த்தனை நிகழ்ச்சியில் நடக்கும் நாமகீர்த்தனம் எப்படி உன் காதில் விழமுடியும்? நீ சொல்வது பொய் மட்டுமல்ல; வேடிக்கையாகவும் உள்ளதே? நாங்களும், உன்னோடுதானே வந்து கொண்டிருக்கிறோம். பஜனை சப்தம் எங்கள் காதில் விழாதபோது உனக்கு மட்டும் எப்படி அதிசயமாகக் கேட்கும்?'' என்று கூறினான்.

அதற்கு அவனோ, ''நான் சொல்வது முற்றிலும் உண்மையே! நாம கீர்த்தனத்தின் ஒலி என் காதுகளில் தெள்ளத் தெளிவாகக் கேட்கிறது. இத்தனைக் கூட்ட நெரிசலிலும் மக்கள் சப்தத்திலும் வீதி இரைச்சலிலும் கூட அந்தப் பஜனைப் பாடல்கள் என் காதில் தேனாகப் பாய்கின்றன. இதற்குக் காரணம் என்னவென்று உங்களுக்குத்

தெரியுமா? என்னுடைய முழுக் கவனமும் பிரார்த்தனை நிகழ்ச்சியில் சென்றுகொண்டிருக்கிறது. உங்களுக்கு அப்படியில்லை. அதனால் தான் அந்த பாடல்களின் சப்தம் உங்கள் காதில் விழவில்லை.

ஒரு கூட்டத்தில் ஒரு குழந்தையின் அழுகுரலை அக்குழந்தை யின் தாய் இனம் காண்பாள். ஏனெனில், தாயின் முழுக்கவனம் அந்தக் குழந்தையின் மீது இருப்பதினால்தான்! எந்த ஒரு விஷயத்தில் நமக்கு ஆர்வம் இருக்கின்றதோ அந்த ஆர்வம் உள்ளவரை நமக்கு அந்த விஷயத்தில் முழுக்கவனம் இருந்து கொண்டேதான் இருக்கும்.

அதுபோலவே, எனக்குப் பிரார்த்தனைக்குச் சீக்கிரம் போக வேண்டும். 'பஜனை ஆரம்பித்துவிடுமே!' என்ற தவிப்பு. அதில் நாம் முழுமையாகக் கலந்துகொள்ள வேண்டுமே என்ற ஆர்வம்தான், எனக்கு அந்த நாமகீர்த்தன பிரார்த்தனையின் ஒலி என் காதில் விழச் செய்தது. ஆனால், உங்களுக்கு அதில் ஆர்வமோ, ஆசையோ இல்லாதிருப்பதால்தான் உங்கள் காதில் அது கேட்கவில்லை'' என்றான்.

ஆனால், அவன் சொன்னதை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. ''நீ எங்களைத் தாழ்வாக நினைக்கின்றாய். எங்களுக்கு ஆர்வம் இல்லை என்று கருதுகிறாய். உன்னைப்போலவே நாங்களும் ஆர்வம்கொண்டிருக்கிறோம். உனக்கு மட்டும் பிரார்த்தனைக் கீதம் காதில் விழுகிறது என்று சொல்வது பொய்யே!'' என்றார்கள். அதற்கு அவன், ''சரி, நான் வேண்டுமானால் உங்களுக்கு அதை நிரூபித்துக் காட்டட்டுமா? இவ்வளவு மக்கள் நெருக்கடியுள்ள பேரிரைச்சல் உள்ள இந்தச் சந்தை வீதியில் அத்தனை பேருடைய கவனத்தையும் என்பக்கம் திசைத் திருப்பட்டுமா?'' என்றான்.

அதைக் கேட்டு அவர்கள், ''உன்னால் முடியாது; முடிந்தால் அதைச் செய்து காட்டு பார்க்கலாம்'' என்றனர்.

பொதுவாக, மனிதர்களுக்கு உலகில் பணத்தின் மீதும், பொருளின் மீதும் ஆசை! ஆகவே, தன் பையில் இருந்து சில்லரைக் காசுகளை எடுத்து, எந்த இடத்தில் அதைப்போட்டால் அதிக சப்தம் வருமோ அந்த இடத்திற்குச் சென்று காசுகளை வீசி எறிய அந்தக்

காசுகள் ‘ஜல்’ என்ற அதிக சப்தத்துடன் ஒலி எழுப்ப, மக்கள் கூட்டத்தில் உள்ளோர் எல்லாம் காசு எழுப்பிய சப்தம் கேட்டுத் திரும்புகின்றனர்.

காரணம், எல்லாருக்குமே காசின் மீது ஆசை இருக்கிறது. அதை அடையவேண்டும் என்ற விருப்பம் இருக்கின்றது. அதை எப்போதும் பெற்றுக்கொள்ளவும், தேடிக்கொள்ளவும் கவனத்துடனே இருப்பதால் காசு விழுந்த ஓசை அவர்களுக்குச் சட்டென்று கேட்டு விடுகிறது. இதைக் கண்டதும் அவர்கள் அனைவரும் இவன் சொன்னதை ஒத்துக்கொண்டனர்.

அதுபோலவே, யாருக்கு எதன்மீது, எத்துறைமீது தணியாத, ஆர்வம் வருகிறதோ, அவர்களுக்கு அந்தத் துறையில் முன்னேற்றம் காண்பது உறுதி என்பதை இக்கதை உணர்த்துகின்றது!

---

ஸ்ரீ ஹரி

**சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு**

அன்பார்ந்த மதுரமுரளி வாசகர்களே!

குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன் சார்பில் வெளிவரும் மதுரமுரளி தெய்வீக மாதப் பத்திரிகைக்குத் தாங்கள் அளித்து வரும் ஆதரவிற்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றி!!

ஏப்ரல் 2007 முதல் மதுரமுரளி மாத இதழ், சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா சார்பில் வெளிவர உள்ளதால், சந்தாதாரர்கள், தங்களது சந்தா தொகையை, **சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா** என்ற பெயரில் மட்டுமே

New No. 51, Old No. 24, 7th Avenue,
Ashok Nagar, Chennai - 600 078, Telephone: 044 - 24895875,
email ID : publications@madhuramurali.org
முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

| | |
|---|---|
| உள்நாடு | : ஆண்டு சந்தா ரூ. 120/– |
| ஆயுள் சந்தா | : ரூ. 2000 (20 வருடங்கள்) |
| வெளிநாடு-வருடச் சந்தா | : ரூ. 600 |

# மாலே மணிவண்ணா - 50

- மஹாவித்துவான் மயிலம் வே. சிவசுப்பிரமணியன்

எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனை இடையறாது வழிபட்ட ஆழ்வார்களில் திருமழிசைப்பிரான், ஒப்பிலியப்பன் மேல் திருச்சந்த விருத்தம் பாடியவர். தத்துவ நிலையின் தனிப் பெரும் பொருளாகப் பகவானைப் பரவியவர். ''நான்முகன் திருவந்தாதி''யில் வெண்பா யாப்பில் பெருமானைத் ''தேடுங்கால் தேவன் ஒருவனே'' என்றுரைத்து 'ஆரும் அறியார் அவன் பெருமை' என்று அவனையே பாடுவதல்லது உலகை நோக்காது இருந்தவர். அவருடைய சீடர் கணிகண்ணன். பல்லவ வேந்தன் திருமழிசையாழ்வார் தன்னைப் பாடவேண்டும் என்று வேண்டியபோது, 'நாராயணனை அன்றி நரனைப் பாடேன்' என்ற ஆழ்வாரது சீடனாகிய கணிகண்ணனைக் கண்டு, ''நீங்களாவது என்னைப் பாராட்டிப் பாடுங்கள்!'' என்று கேட்டான். அரசனைப் பாட மறுத்தார் கணிகண்ணன்! பல்லவ வேந்தன் தம் தலைநகராகிய காஞ்சீபுரத்தை விட்டு வெளியேறும்படி கணிகண்ணனுக்கு உத்தரவிட்டான். கணிகண்ணன் காஞ்சியை விட்டுப் புறப்பட்டார். சீடரைப் பின்பற்றி ஆழ்வாரும் புறப்படலானார். பெருமாளை விடுவாரா ஆழ்வார். பெருமாளை நோக்கிப் பாசுரம் ஒன்றைப் பாடினார்

*''கணிகண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி*
*<u>மணிவண்ணா</u> நீ கிடக்க வேண்டா - துணிவுடைய*

*செந்நாப் புலவனும் போகின்றேன் நீயும் உன்தன்*
*பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்''*

என்ற அளவில், தமிழ் அறியும் பெருமான் பரம பாகவதராகிய புலவரைப் பிரிய மனம் இன்றி, தன் அரவணையைச் சுருட்டித் தூக்கிக்கொண்டு, ஆழ்வார் பின்னே புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

நகரம் பொலிவிழந்தது. அமங்கலத் தோற்றம் அடைந்த நகரத்தைக் கண்டு அஞ்சிய பல்லவ வேந்தனும் நகர மாந்தரும் புலர் காலைப்பொழுதில் நகர்க்குப்புறத்தே தங்கிய ஆழ்வார் திருவடிகளிலும், கணிகண்ணன் திருவடிகளிலும் சரண் புகுந்து

பெருமாளுடன் நகருக்குள் வருமாறு பிரார்த்தித்தார்கள். ஆழ்வார் மீண்டும் பெருமாளைத் தரிசித்துத் தமிழால் விண்ணப்பித்தார்.

*''கணிகண்ணன் போக்கொழிந்தான் காமரு பூங்கச்சி*
*மணிவண்ணா நீ போகவேண்டா - துணிவுடைய*
*செந்நாப் புலவனும் போக்கு ஒழிந்தேன் நீயும் உன்தன்*
*பைந்நாகப் பாய் விரித்துக் கொள்''*

என்ற பாசுரம் கேட்டு, பெருமாள் நகர்க்கு ஆழ்வாருடன் எழுந்தருளினான். நகரும் மங்கலப் பொலிவு பெற்றது - இவ்வாறு ஒருநாள் இரவு ஆழ்வாருடன் பெருமாள் தங்கிய திருத்தலம் ''ஓர் இரவு இருக்கை'' என்னும் பெயருடன் ('ஓரிக்கை' எனத் திரிந்துள்ளது) இன்றும் காஞ்சிபுரத்தை அடுத்திருந்து வரலாற்றுச் சான்றாகத் திகழ்கிறது. இந்தத் தமிழறியும் பெருமானைக் குமரகுருபர முனிவர்,

*''பணிகொண்ட முடவுப் படப்பாய்ச் சுருட்டுப்*
*பணைத்தோள் எருத்து அலைப்பப்*
*பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின் சென்ற*
*பச்சைப் பசுங்கொண்டலே''*

என்று மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் கூறி மகிழ்கிறார்.

(பணி - ஆழ்வாரின் ஏவல் (கட்டளை) முடவு - வளைந்த படப்பாய் - ஆதிசேடனாய படுக்கை, சுருட்டு - படுக்கையைச் சுருட்டியவாறு, எருத்து - பிடரி, அலைப்ப - வருத்த - படுக்கையைச் சுருட்டித் தோளை ஒட்டிய கழுத்தில் சுமந்ததால் அது வருத்துகிறதாம்!)

பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னால் பழமையான இலக்கண இலக்கியமாகிய இயல் தமிழில் புலவனாக இருந்த பெருமான் வாய்ப்புக் கிடைத்தபோது தமிழின் பின் செல்லத்தயங்கவில்லை என்பது வியப்பல்ல! அவரது தமிழ்க் காதல் அத்தகையது!

இயற்றமிழ் மட்டுமா? இசையிலும் பெருமான் வல்லவர்!'' என்பதை அடுத்த தோத்திரம் சொல்கிறது.

(தொடரும்)

# பிருந்தாவனமும் நந்தகுமாரனும்

கஹ்வர் வனத்திலுள்ள மலையில் ஒரு அதிசயக் காட்சி! மலை மீது பாபா காலை நீட்டி உட்கார்ந்திருக்கிறார். அவருடைய கால்கள் தானாகவே தீப்பற்றி எரிந்தன. அவை உலர்ந்த கட்டையைப்போல் திகுதிகுவென்று எரிந்துகொண்டிருந்த போதிலும், அவர் நிச்சலனமாக, எவ்வித அசைவுமின்றி, அமைதியான முகத்துடன் அமர்ந்திருந்தார். தேக உணர்வே இல்லாதவர் போலத் தோன்றினார்.

கீழிருந்த கிராமத்திலிருந்து பார்த்த மக்கள் கூக்குரலிட்டனர். ''ஹா! மௌனிபாபா எரிந்துகொண்டிருக்கிறார்! மௌனிபாபா எரிந்துகொண்டிருக்கிறார்!'' சக்ஸௌலீ என்ற அந்தக் கிராமத்தி லிருந்த மக்கள் பாபாவை நோக்கி ஓடினர். ஒரு வாளி நீரை எடுத்து, அவர் கால்களில் ஊற்றினர். தீ அணைந்துவிட்டது. எல்லாரும் உரத்த குரலில் ''பாபா'', ''பாபா'' என்று கூவிப்பார்த்தனர். ஆனால், சமாதியில் ஆழ்ந்திருந்த அவரோ பதில் ஏதும் சொல்லவில்லை. அவரை விரைவாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். எத்தனையோ முயன்றும் அவருடைய உயிர் பிரிந்துவிட்டது.

மௌனி பாபா லாகூர் அருகில் ஒரு கிராமத்தில் பிறந்தார். அவருக்குப் பஞ்சாபிகளுக்கே உரிய சிறந்த உடல்வாகு. அவர் சீதாராமரை உபாசித்து வந்தார். இளமையிலேயே அவர் வீட்டைத் துறந்து, வ்ரஜத்தை அடைந்தார். ஆரம்ப காலங்களில் எங்கெங் கெல்லாம் அன்னதானம் நடைபெற்றதோ, அங்கெல்லாம் சென்று உண்பார்.

ஒருமுறை ஒரு பெண்மணி அவரிடம் பரிஹாஸமாக, ''பாபா! நீங்கள் சாப்பிட மட்டும்தான் செய்வீர்களா? வேறு ஏதாவது செய்வீர்களா?'' என்று கேட்டாள். தன்னுடைய குறிக்கோளை மறந்த பாபாவிற்கு, அந்தப் பெண்மணியின் வார்த்தைகளால், வைராக்யம் பெருக்கெடுத்தது. அன்றிலிருந்து அவர் ஏகாந்தமாகப் பஜனை செய்ய ஆரம்பித்துவிட்டார்.

கஹ்வர் வனத்தில் மிகவும் சிறிதான குடிசையில் இருந்து கொண்டு அவர் பஜனை செய்தார். பெரும்பாலும் மௌனத்திலேயே

இருந்ததால், மக்கள் அவரை 'மௌனிபாபா' என்று அழைத்தனர். எப்போதாவது வ்ரஜவாஸிகளிடத்தில் மட்டும் பேசுவார். தானாகவே வரும் உணவை மட்டுமே அவர் உண்பார். உணவு கிடைக்காவிட்டால் காட்டிலுள்ள சருகுகளை மட்டுமே உண்டுவிட்டு இருப்பார். அவர் வ்ரஜவாஸிகளிடம் மட்டுமே உணவை ஏற்பார். வேறு யாரிடமும் ஏற்கமாட்டார். அவரை யாரும் ஏமாற்றவும் முடியாது. ஒருமுறை அவர் வெளியில் சென்றிருந்தபோது ஒரு பெண்மணி அவருடைய குடிசையில் அவருக்காக ரொட்டிகளை வைத்துவிட்டுச் சென்றுவிட்டாள். அவர் திரும்பி வந்தபோது லச்சோ என்ற பெண் ''பாபா! கமலா உங்களுக்காக ரொட்டி வைத்துவிட்டுச் சென்று இருக்கிறாள்'' என்று சொன்னாள்.

பாபா உடனே, ''பொய் சொல்கிறாய். உன்னுடைய அண்ணிதான் வைத்துவிட்டுச் சென்றிருக்கிறாள்'' என்று கூறினார். அந்தப் பெண்ணினுடைய அண்ணி வ்ரஜவாஸி இல்லை. பாபா அந்தப் பெண்மணி ரொட்டி வைத்ததையும் பார்க்கவில்லை. அவள் வ்ரஜவாஸி இல்லை என்பதையும், அவரிடம் யாரும் சொன்னதில்லை.

வ்ரஜவாஸிகள் அளிக்கும் உலர்ந்த ரொட்டி எவ்வளவு ஆனந்தத்தைத் தருமோ, அந்த ஆனந்தத்தை உயர்ந்த உணவு வகைகளிலிருந்தும் பாபா பெறமாட்டார். ஒருமுறை ஒரு பக்தர் அவருக்குப் பாயஸம் கொடுக்க விரும்பினார். பாபா அதை வேண்டாம் என்று கூறியதோடு, அதை அங்கிருந்த ஒரு நாயின்முன் வைத்துவிட்டார். நாயும் அதை விரும்பி நக்க ஆரம்பித்துவிட்டது. அப்போது அருகிலிருந்த ரமேஷ் அவரிடம், ''பாபா! தாங்கள் செய்தது சரியல்ல. அந்தப் பாயஸம் ப்ரஸாதமாயிற்றே!'' என்று கூறினார். அப்பொழுதே மௌனிபாபா, அந்த நாய் நக்கியிருந்த பாயஸத்திலிருந்து சிறிது தானும் எடுத்து அருந்தினார்.

''அச்சோ! அது நாயின் எச்சிலாயிற்றே'' என்று ஒருவர் கேட்க, பாபா ''நிச்சயமாக இந்த நாய் என்னைக் காட்டிலும் சிறந்ததுதான். மேலும், இது வ்ரஜவாஸியாக உள்ளதால், என் பூஜைக்கு உரியதாகவும் ஆகிறது. அதனால், இதன் எச்சில் மஹா

ப்ரஸாதமாகவே ஆகும்'' என்று கூறினார். இப்படி, பாபா தன்னை மிகவும் தாழ்ந்தவராகவே எப்போதும் எண்ணுவார். யாரும் தன்னை நமஸ்கரிப்பதை அனுமதிக்க மாட்டார். அப்படி யாராவது நமஸ்கரித்து விட்டால், அவர் தன்னையே தண்டித்துக் கொள்ளும் கொடுமையைப் பார்த்து, அவருடைய பக்தர்கள், அவரைக் காணும் பொழுது மனதால் நமஸ்கரித்துக் கொள்வார்களே அல்லாமல், உடலால் நமஸ்கரிக்க மாட்டார்கள்.

பாபா தன்னை சீதா தேவியின் தோழி என்ற **பா**வத்தில் பக்தி செய்தார். பகல் நேரங்களில் அவர் அநேகமாகத் தலைகுனிந்து உட்கார்ந்தவாறே சீதையின் த்யானத்தில் ஆழ்ந்திருப்பார். இரவு நேரங்களில், ஏதாவது மரத்தின் மீது சாய்ந்து உட்கார்ந்த வண்ணம், சீதையை நினைத்து அழுதுகொண்டிருப்பார். சீதாதேவி அவருக்கு அடிக்கடி தரிசனம் தந்து வந்தாள். ஆனால் இவள் இப்படி அடிக்கடி தரிசனம் தந்து மறைவதைப் பாபாவால் தாங்க முடியவில்லை. அவருடைய விரஹம் நாளுக்கு நாள் பெருகியது.

மிலனம் என்பது விரஹத்தைத் தொடர்ந்தே ஆக வேண்டுமன்றோ? ஒருநாள் விரஹம் என்னும் அக்னி உச்சக் கட்டத்தை அடைந்து அவர் தேகத்தையே எரித்துவிட்டது. என்றென்றைக்கும் பாபா சீதையின் தோழியாகத் திவ்யதாமத்தை அடைந்துவிட்டார்.

(தொடரும்)

ஸ்ரீ ஹரி:

**ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் அன்னதானக் கூடம் - மதுரபுரி**

ஸ்ரீ சாந்தீபனி குருகுல ட்ரஸ்ட் சார்பில், மஹாரண்யம் மதுரபுரி, ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் அன்னதானக் கூடத்தில் தினமும் நண்பகல் 12 மணியளவில் கிராமப் பொதுமக்களுக்கு அன்னதானம் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

மஹாரண்யம், மலைப்பட்டு, அழகூர் மற்றும் பல கிராமங்களில் இருந்து வரும் பொதுமக்கள் இந்த அன்னதானத்தினால் பயனடைகின்றனர்.

- Trustees

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து –132

*நின்னெரி எரித்தனை நீறாக்கிடுமுன்*
*நின்னருள் புரி அருணாசலா*

உத்தம பக்தர்கள் விரஹ அக்னியில் தவிப்பதையும், தூலரீதியில், சரீரத்தை மயானத்தில் வைத்து எரித்துவிடும் முன் இறைவனின் அருள்பெற வேண்டியது இன்றியமையாதது என்பதையும் இப்பாடல் அழகாக உணர்த்துகிறது.

வேறு '**பா**வங்களையும்' கூட இப்பாடல் குறிப்பதைப் பார்க்கலாம். அண்ணாமலையே ஜோதி ஸ்வரூபம்தான். அக்னிப் பிழம்புதான். நெருப்பு மலையாக இருக்கக்கூடிய அருணாசலத்தை எங்ஙனம் நெருங்குவது? நெருங்கினால், அதற்கு மேல் ஒருவர் இருக்கமுடியுமா? முடியாது. ஆதலால், ''அருணாசலேஸ்வரா! நெருப்பாக இருக்கக்கூடிய உன்னை என்னால் நெருங்க முடியாது. இருப்பினும் நான் உன்னை அடைய அல்லவோ ஆசைப்படுகிறேன்'' என்பது போல் உள்ளது. அருணாசலேஸ்வரன் ஜோதி ஸ்வரூபமே. எனினும், அந்த ஜோதியோ சரீரத்தைப் பொசுக்குவதில்லை. அது, அஞ்ஞானம் எனும் தேவையற்ற பொதிச் சுமையைப் பொசுக்குகிறது. அஞ்ஞானத்தைப் போக்கி, ஞானத்தை அருளுகிறது. அதனால்தான், ''ஞானத் தபோதனரை 'வா'வென்றழைக்கும் மலை'' எனப் பெயர் பெற்றது.

மற்றுமொரு ரீதியில் இப்பாடலைப் பார்ப்போம் எனில், சாதனா ரகசியங்களைச் சொல்வது தெரிகிறது. ஒருவர் சாதனை செய்யும் காலத்தில், இறைவனின் அருளால் அப்ராக்ருதமான (வலிமையான தேஜோமயமான எனப் பொருள் கொள்ளலாம்) சரீரம் பெறுகிறார். இதுவன்றி, ஒருவருக்கு ஆன்ம அனுபவம் கூடுவதில்லை.

நாம் வீடுகளில் வைத்து உபயோகிக்கும் மின்விளக்கானது இவ்வளவு சக்தி படைத்தது என்கிறோம். அஃதாவது 20w, 40w என்று கூறுகிறோம். இது, அந்த பல்ப் எந்த அளவிற்கு மின்சார சக்தியைத்

தாங்கி அதை ஒளியாய்த் தரவல்லது என்பதைக் குறிக்கிறது. இது, மீறப்பட்டால் அந்த பல்ப் பழுதாகிவிடும். உதாரணமாக 230v 40w என்று குறிக்கப்பட்ட பல்ப்பில் 300v அளவு மின் அழுத்தம் பாயும் எனில் அது உடனே பழுதாகும். ஏனெனில், அதன் மின்சக்தி அளவு மீறப்படுகிறது. அதுபோலவேதான் நமது சரீரமும். இறைவன் எந்தக் கணத்திலும் ஒருவருக்குத் தனது அனுபவத்தையும், தரிசனத்தையும் தரவல்லவன்தான். ஆயினும், அவன் அப்படி அருளுவானே எனில், முன்காட்டிய உதாரணம் போல், சரீரமானது இறைவன் தரும் அனுபவத்தைத் தாங்கவொண்ணாது வீழ்ந்துவிடும். ஆக, இறைவனின் அருள் பெறுவதற்குச் சரீரம் அந்தத் தகுதியைப் பெறவேண்டும் என்பது அவசியம். சாதனைக் காலத்தில் சரீரமானது சிறிது சிறிதாகப் பக்குவமடைகின்றது. பூரண தகுதி பெற்றவுடன், இறைவன் அருளுகிறான். இது சாதனைக் கிரமத்தில் ஏற்படக்கூடிய விஷயம்.

காவ்யகண்ட கணபதி முனிவர் எனும் சிறந்த பெரியார் ஒருவர் ரமண மஹரிஷிகளிடம் பெரும் அன்பு பூண்டு வாழ்ந்து இருந்தார். இவர் அற்புதமாகக் கவி இயற்றும் ஆற்றல் படைத்தவர். அதனாலேயே, ''காவ்ய கண்டர்'' எனும் பெயர் பெற்றார். காசியில் உள்ள துண்டி கணபதியின் அம்சமாக அவதரித்தார். இவர் மிகுந்த தபோசக்தி மிக்கவராக இருந்தார். லலிதா ஸஹஸ்ர நாமம் இவர் ஜபித்தார் எனில், இவர் மேல் மட்டும் மழை பெய்யும். இவர் பிறர் மனதில் இருப்பதை அனாயாசமாக அறியும் ஆற்றல் படைத்தவர். நவாக்ஷரீ, பஞ்சாக்ஷரீ போன்ற மந்திரங்களை எப்பொழுதும் விரல்களினால் எழுதிய வண்ணமிருப்பார். பல மந்திர சித்திகள் கைவரப்பெற்றவர். இவருக்கே பல சிஷ்யர்கள் உண்டு. இவர் பல அனுபவங்கள் பெற்றவர். அப்படிப்பட்ட இந்தக் காவ்ய கண்ட கணபதி முனிவர் ரமண மஹரிஷிகளை முதன்முதலில் பார்த்தவுடன் என்ன தெரிவித்தார் எனில், ''மிகப்பெரிய ஆத்மானுபவம் இவர் கைவரப்பெற்று இருந்தார். எனினும், அதைச் சற்றும் வெளிக்காட்டாது, கல்லுளிமங்கன் போல் அல்லவா இருக்கிறார்'' என்றார். காரணம், இந்த உயர்ந்த ஆத்மானுபவத்தில் ஏற்படும் ஆனந்தம் தாங்க முடியாமல் மிக உத்தம பக்தர்களான மீரா

போன்றவர்கள் கூடத் துடித்து இருக்கின்றனர். ரமணரோ ஒன்றும் நடவாததுபோல் அசையாது இருக்கிறாரே என ஆச்சரியப்பட்டார்.

உயர்ந்த ஆன்மானுபவ நிலையில் ஏற்படும் ஆனந்தம் தாங்க முடியாதது. துக்கம் மனிதர்களால் தாங்க முடியாததாகிறது. அதுபோல், மஹான்களுக்கு ஆனந்தம் தாங்க முடியாததாக இருக்கிறது. இந்த ஆனந்தத்தைத் தாங்குமளவிற்குச் சரீரம் பக்குவமடைய வில்லையென்றால் சரீரம் விழுந்துவிடும்.

(பகவான் ரமணருக்கு, மஹரிஷி என்ற பெயரைக் கொடுத்தவரும் காவ்ய கண்ட கணபதி முனிவரே).

''நின்னொளி எரித்தெனை நீறாக்கிடுமுன்'' - உயர்ந்த அனுபவத்தைத் தாங்காமல் சரீரம் தவிக்கும்முன், ''அருணாசலேஸ்வரா! நீ வந்து உனது அருளினால் சரீரத்திற்கு அந்த அனுபவத்தைத் தாங்குமளவு பரிபக்குவம் தந்துவிடு என்கிறார் ரமணபகவான்.

(தொடரும்)


ஸ்ரீ ஹரி:

## மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை - திருச்சி

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின் அருளாசியுடன், உலக அமைதி வேண்டியும், எல்லாவித நன்மைகள் ஏற்படவும், ''ஹரே ராம....'' மஹாமந்திரத்தின் வைபவத்தை நிலைநிறுத்தவும், ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின் முன்னிலையில், அகண்ட

**''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே!**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே!!''**

மஹாமந்த்ர நாமகீர்த்தனக் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற உள்ளது.

இடம் : Garbba Rakshagi Mahal (Mangal Mahal)
3-A, Reynolds Road, Contonment, Trichy - 620 001.
(Court Bus Stop; Route : Uraiyur)

நாள் : 10.03.2007, சனிக்கிழமை

நேரம் : மாலை 6.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை

இதில் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் தொடர்புக்கு :

**சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா – திருச்சி மையம்**
Ph. : 0431-2436299; Cell : 94864 93791 / 93803 38951

# செய்திகள்

## ஆந்திரபிரதேசம் ஓங்கோலில் நாமத்வார் துவக்கம்

ஜனவரி மாதம் 31ஆம் தேதியன்று, ஆந்திர மாநிலத்தில் உள்ள ஓங்கோலில், சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா, நாமத்வார் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களால் தொடங்கப் பட்டது. இந்த விழாவில் நூற்றுக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் மஹாமந்திர நாமகீர்த்தனம் செய்தார்கள்.

மாலை 6 மணியளவில் நம் சத்சங்கத்தைச் சேர்ந்த திரு M.K. ராமானுஜம் சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா பற்றி ஓர் அறிமுகம் செய்ய, ஸ்ரீ சாந்தீபனி குருகுல சேவா டிரஸ்ட் (AP) வேத பாடசாலையைச் சேர்ந்த அத்யாபகர் திரு. ராகவேந்திர கணபாடிகள், திரு. பவன் அவர்களின் வேத மந்திரங்களோடு விழா ஆரம்பமாகியது.

பிறகு, திரு. ரவிச்சந்திரன், டிரஸ்டி. ஸ்ரீ சாந்தீபனி குருகுல சேவா டிரஸ்ட் (A.P.) வரவேற்புரையும், ஸ்ரீமதி லதா ரவிச்சந்திரன் அவர்கள் கேந்த்ராவின் செயல்பாடுகள் பற்றியும் பேசினார்கள். பிறகு, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், இறை நாமத்தின் மஹிமைப் பற்றியும் ஓங்கோலில் நாம மையம் துவங்கப்பட்டதன் காரணத்தைப் பற்றியும் பேசினார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜி, பக்தர்களோடு மஹாமந்திர கீர்த்தனம் செய்தார்கள். இந்த மையத்திற்கு திரு. ரவிச்சந்திரன்-திருமதி லதா ரவிச்சந்திரன், திரு. பலராமன் பொறுப்பேற்றுள்ளனர்.

பிப்ரவரி மாதம் முதல் தேதி அன்று ஸ்ரீ ஸ்வாமிஜி பஞ்சமுக ஆஞ்சநேயர் திருக்கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்தார்கள்.

அன்றைய தினம் மாலை 5.30 மணியளவில் ஓங்கோலில் அருகில் இருக்கும் கிராமத்தில் நகரசங்கீர்த்தனம் நடைபெற்றது. நகரசங்கீர்த்தனம் 15க்கும் மேற்பட்ட முக்கிய வீதிகளில் சென்று முந்நூறுக்கும் அதிகமான இல்லங்களைக் கடந்து ஸ்ரீ வேணுகோபால ஸ்வாமி கோயிலில் முடிவுற்றது.

சுமார் 7 மணியளவில் நாமகீர்த்தனம் ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ரீ ஸ்வாமிஜி, இதில் கலந்துகொண்டு நாம மஹிமை பற்றி ஆழமாக விவரித்துக்கூற அதை ஸ்ரீ ராகவேந்திரசர்மா தெலுங்கில் மொழி பெயர்த்து சொன்னார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜி, பக்தர்களுக்குத் தமது திருக்கரங்களால் கோபி சந்தனம், துளசிமாலை அணிவித்தார்கள்.

நாமகீர்த்தனத்தின் மஹிமையும், சைதன்ய மஹாப்ரபு நாம பிக்ஷா கேந்திராவின் முக்கியத்துவத்தையும் எடுத்து விளக்கப்பட்டன. பிப்ரவரி மாதம் 2-ஆம் தேதி ஓங்கோல் நாமத்வாரில் நமது ஸத்ஸங்கத்தைச் சேர்ந்த மாதுஸ்ரீகள் ஸ்ரீமத் பாகவத பாராயணம் செய்தனர். அங்கு ஸத்ஸங்கம் நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

**பிப்ரவரி 2-ஆம் தேதி**

வேலூர் மாவட்டம் சோளிங்கரில் உள்ள மேல்நிலைப் பள்ளிக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் விஜயம் செய்து அங்குப் பயிலும் பள்ளி மாணவ–மாணவிகளுக்கு அருளுரை வழங்கினார்கள். பின்னர், அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமி திருக்கோயிலில் பக்தர்களுக்கு அருளுரை வழங்கினார்கள். நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளைத் திரு. ரவிச்சந்திரன் மற்றும் அவரது குடும்பத்தினர் செய்திருந்தனர்.

**பிப்ரவரி 8-ஆம் தேதி**

வேலூர் மாவட்டம் பேர்ணாம்பட்டில் திருப்பதி வெங்கடேசப் பெருமாள் ஆலய நிர்வாகிகளான அன்பர்கள் திரு. ராமு அவர்களின் ஏற்பாட்டின் பேரில் பேர்ணாம்பட்டு பஸ் நிலையம் அருகிலிருந்து ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் ''ஹரே ராம...'' நாம சங்கீர்த்தன நகர்வலம் நடைபெற்றது. பின்னர் அருள்மிகு ஸ்ரீ காமாட்சியம்மன் ஆலயத்தில், ஸ்ரீ ஸ்வாமிஜி பக்தர்களுக்கு அருளாசி வழங்கினார்கள். பின்னர், கன்னிகாபரமேஸ்வரி ஆலய மகா கும்பாபிஷேக விழாவில் கலந்துகொண்டார்கள். குடியாத்தம் திரு. K.E. மாணிக்கமுதலியார் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து இருந்தார்.

### பிப்ரவரி 11-ஆம் தேதி

வேலூர் மாவட்டம் ஆம்பூர் அருகேயுள்ள ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, வடபுதுப்பட்டு கிராமத்தில் உள்ள ஞானமலை ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமி ஆலயத்திற்கு ஸ்ரீ ஸ்வாமிஜி வருகை தந்து, பக்தர்களுக்கு அருளாசி வழங்கி அருளுரை நிகழ்த்தினார்கள். இதற்கான ஏற்பாடுகளைத் திரு. விஜயராகவன் மற்றும் ஆலய நிர்வாகிகள் செய்திருந்தனர்.

பின்னர், திருப்பத்தூர் கோட்டைப் பகுதியில் உள்ள ஸ்ரீ கஜேந்திரவரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் ஸ்ரீ ஸ்வாமிஜி அருளுரை அளித்து, தொடர்ந்து ஆலய விழா மண்டபத்தில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். திரு. S.P. மணவாளன், திரு. ராமானுஜம் மற்றும் ஆலய நிர்வாகிகள் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்து இருந்தனர்.

### பிப்ரவரி 14-ஆம் தேதி

வேலூர் மாவட்டம் வாலாஜாநகரில் ஸ்ரீ ஸ்வாமிஜிக்குச் சிறப்பான வரவேற்பு திரு. K. பழனி தலைமையில் அளிக்கப்பட்டது. பிறகு ஸ்ரீ ஸ்வாமிஜி வெற்றி பக்த ஆஞ்சநேயர் ஆலயத்திற்கு விஜயம் செய்து அருளுரை நிகழ்த்தினார்கள். ஏற்பாடுகளை வாலாஜா மோகன்தாஸ், பாபு, ராமு பட்டாச்சாரியர், பாலகிருஷ்ணன், சீனிவாசன் உள்பட ஆலய நிர்வாகிகள் சிறப்பாகச் செய்து இருந்தனர்.

**ஸ்ரீ ஸ்வாமிஜிக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை**

Personal Secretary to

**H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**

New No. 51, Old No. 24, 7th Avenue,
Ashok Nagar, Chennai - 600 083
Telephone : 044-24895875,
email ID : contact@madhuramurali.org

என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

# நாமகீர்த்தன ஸத்ஸங்கச் செய்திகள்

கோவூரில், மார்கழி மாத ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் மார்கழி பஜனை காலையில் கோவூர் முரளீதரதாஸ் ஸத்ஸங்கம் சார்பில் ''ஹரே ராம....'' மஹாமந்திர நாமகீர்த்தனம் நடைபெற்றது. இதில் 50க்கும் மேற்பட்ட குழந்தைகளும் பெரியவர்களும் கலந்துகொண்டனர்.

கம்பம், அருள்மிகு கம்பராயப் பெருமாள் கோயில், ஸ்ரீ ஆஞ்சநேயர் மண்டபத்தில் ஒவ்வொரு சனிக்கிழமைதோறும் மாலை 5 மணி முதல் மாலை 6 மணி வரை ''ஹரே ராம...'' மஹாமந்திர கீர்த்தனம் நடைபெறுகின்றது.

தூத்துக்குடியில் புதன்கிழமைகளில் இரவு 7 மணிமுதல் 8 மணி வரை சச்சிதானந்த சபையிலும், வியாழக்கிழமைகளில் ஸ்ரீ வைகுண்டபதி பெருமாள் திருக்கோயிலிலும், சனிக்கிழமைகளில் பக்தர்கள் இல்லங்களிலும், ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 5 மணி முதல் 6 மணி வரை திரு. V.P. காமராஜ் அவர்கள் இல்லத்திலும் ''ஹரே ராம...'' நாம கீர்த்தனம் நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

தூத்துக்குடியில், மார்கழி மாதத்தை ஒட்டி நாம முத்துநகரிலும், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் நகர்வல நாமகீர்த்தனம், ஸத்சங்கம், கூட்டுப்பிரார்த்தனை முதலியவை வெகு சிறப்பாக நடைபெற்றன. சிவன் கோயில், தங்கம்மாள்புரம், புதுக்கிராமம் பெருமாள் கோயில், ஏரல், திருமலையாபுரம் முதலான இடங்களில் நகர்வல நாமகீர்த்தனம் நடைபெற்றது. இவற்றிற்கான ஏற்பாடுகளை தூத்துக்குடி கேந்திரா திரு. கதிரேசன் அவர்கள் மற்றும் பக்தர்கள் செய்தார்கள்.

### பெரியகுளத்தில் நாம சங்கீர்த்தனம்

பெரியகுளத்தில் உள்ள பல இடங்களில் 6–2–07 முதல் 11–2–07 வரை பல வீதிகளில் பல இல்லங்களில் நாம சங்கீர்த்தனம் நடைபெற்றது. இந்த நாம சங்கீர்த்தனத்தில் பம்மல் திரு. பாலாஜி அவர்கள் கலந்து கொண்டு நாம மஹிமையைப் பற்றி விளக்கினார்கள்.

### பால்தாட் அகரத்தில் ஸ்ரீஸ்வாமிஜியின் விஜயம்

14–2–07 அன்று ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் குடியாத்தம் அருகில் உள்ள பால்தாட் அகரம் கிராமத்திற்கு விஜயம் செய்து 'ஹரே ராம...'' மஹாமந்திர நகர்வல நாம கீர்த்தனத்தில் கலந்துகொண்டார்கள். ஸ்ரீ வாரண வல்லி சமேத ஸ்ரீ கஜேந்திரவரதர் திருக்கோவிலில் நகர ஸங்கீர்த்தனம் பூர்த்தியடைந்தது. திரு. அனந்த பத்மநாபன், திரு. வில்வநாதன், திரு. ரஞ்சி, திரு. கல்யாணம், திரு. குப்புசாமி அய்யர் ஆகியோர் இந்த வைபவத்திற்கான ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்து இருந்தனர்.

ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீ சாந்தீபனி குருகுல சேவா ட்ரஸ்ட் (AP)

ஐதராபாத்தைச் சேர்ந்த Chartered Accountants திரு. ரவிச்சந்திரன்-ஸ்ரீலதா தம்பதியினரின் சுயமுயற்சியால் 08-11-2007 அன்று ஸ்ரீ சாந்தீபனி குருகுல சேவா ட்ரஸ்ட் (AP) துவக்கப்பட்டது.

இந்த டிரஸ்டின் சார்பில் யஜுர் வேத பாடசாலை நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இங்குக் கிருஷ்ண யஜுர் வேதம் பயிற்றுவிக்கப்படுகிறது.

இந்த வேத பாடசாலைக்கு ஸ்ரீ ராகவேந்திர கணபாடிகள் அத்யாபகராகப் பொறுப்பேற்று நடத்தி வருகிறார்கள். இந்தப் பாடசாலையில் 11 மாணவர்கள் வேதம் பயின்று வருகிறார்கள். இந்தப் பாடசாலைக்கு ஒரு காப்பாளரும், ஒரு உதவியாளரும் இருந்து வருகிறார்கள்.

இங்கு, வேதம் பயிலும் மாணவர்களுக்கு, வேதத்தோடு ஆங்கிலம், கணிதம் மற்றும் பொதுஅறிவுப் பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. இந்தப் பாடசாலையின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு 2006ஆம் ஆண்டு நவம்பர் 7, 8, 9 தேதிகளில் ஸ்ரீசைலம், ஸ்ரீரங்கம் மற்றும் பல இடங்களிலிருந்து வேத விற்பன்னர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இதன் டிரஸ்டிகளாகத் திரு. ரவிச்சந்திரன், திருமதி. ஸ்ரீலதா ரவிச்சந்திரன் இருந்து பாடசாலையை நிர்வகித்து வருகின்றார்கள். பாடசாலை 1st Floor, 77, Anand Nagar, Khairatabad, Hyderabad - 500 004ல் நடந்து வருகின்றது.

மேலும் விபரங்களுக்கு

**SRI SANDEEPANI GURUKULA SEVA TRUST (AP)**

Regd. Office :

2nd Floor, Shyam Apartments,
6-3-563/F, Erramanzil, Hyderabad - 500 082.

Trustees

Sri. N. RAVICHANDRAN - 92465 88899
Smt. SRILATHA RAVICHANDRAN - 98480 24928
Off : 040-23328934

## ஸ்ரீ ஸ்வாமிஜியின் நிகழ்ச்சி நிரல்

| தேதி/நேரம் | நிகழ்ச்சி/இடம் | தொடர்புக்கு |
|---|---|---|
| 08.03.2007<br>09.03.2007<br>11.03.2007<br>13.03.2007<br>7.00 - 9.00 p.m. | அருளுரை<br>இடம் : ஸ்ரீ நவநீத கிருஷ்ணன் திருக்கோயில், மேல வீதி, தஞ்சாவூர் | திரு. N. ராஜகோபாலன்<br>04362-241620<br>98942 41620 |
| 10.03.2007<br>6.00 - 8.00 p.m. | கூட்டுப் பிரார்த்தனை,<br>இடம் : திருச்சி | 93803 38951<br>0431-2436299 |
| 18.03.2007<br>5.00 - 6.00 p.m. | நாமகீர்த்தனம்,<br>இடம் : அருள்மிகு பெருமாள் கோயில், பேர்ணாம்பட்டு | திரு. குமரேசன்<br>94433 09399 |
| 7.00 - 9.00 p.m. | இடம் : ஸ்ரீனிவாச பெருமாள் திருக்கோயில், ஆம்பூர் | |
| 19.03.2007<br>26.03.2007<br>6.00 - 8.00 p.m. | சங்கீத உபந்யாஸம்<br>இடம் : பெங்களூர் | திரு. A. சங்கரநாராயணன்<br>98450 22033 |
| 27.03.2007<br>28.03.2007<br>6.00 - 8.00 p.m. | அருளுரை<br>இடம் : ராஜமன்னார்குடி | |
| 07.04.2007<br>08.04.2007<br>7.00 - 9.00 p.m. | கூட்டுப் பிரார்த்தனை<br>இடம் : Town Hall, மஞ்சக்குப்பம், கடலூர் | திரு. R. சுந்தரேசன்<br>04142-232324 |
| 13.04.2007<br>14.04.2007 | கூட்டுப் பிரார்த்தனை<br>இடம் : லக்ஷ்மி சுந்தரம் ஹால் தல்லாகுளம், மதுரை-2. | திரு. ராமானுஜதாசன்<br>94420 90073 |

**மங்களானிபவந்து**

*Copyright of articles published in '**MADHURAMURALI**' is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording or by any information storage and retrieval system, without permission in writting from the publisher of Madhura Murali.*